**IN THE COURT OF THE II-ADDITIONAL DISTRICT COURT, ARAKKONAM. RANIPET DISTRICT.**

**DEPOSITION OF WITNESS**

**SC.No.53/2025 - PW-2**

| | |
|---|---|
| Name | திரு.பால கிருஷ்ணன் |
| Husband/Father Name | ஆஞ்சநேயர் |
| Village /Area | கிழவனம் |
| Taluk | அரக்கோணம் |
| Occupation | கூலி |
| Age | 48 |
| Religion | |

Solemnly affirmed in accordance with the provision of Evidence Act X of 1872 on the day of 17.10.2025.

**(எதிரிகள் 3 முதல் 4 வரை ஆஜர். எதிரி 1 மற்றும் 2 கு.வி.மு.ச பிரிவு 317ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).**

**முதல் விசாரணை :**

நான் மேற்கண்ட விலாசத்தில் வசித்து வருகிறேன். இறந்த சந்திரன் என்னுடைய தம்பி ஆவார். அசா.1 என்னுடைய தம்பி மனைவி ஆவார். கடந்த 05.09.2024 அன்று என் தம்பி வேலை செய்த கூலி பணத்தை வாங்குவதற்காக டி.வி.எஸ் இரு சக்கர வாகனத்தில் சென்றார் அவரை வழி மடக்கி கீதா, அவரது மகன் ஆகாஷ் என்பவர்கள் என் தம்பியின் சட்டையை பிடித்து சண்டை போட்டார்கள் அப்போது எத்திராஜ் என்பவர் வீட்டில் இருந்து கத்தியை எடுத்து வந்து என் தம்பியை வெட்டும்போது வெட்டாதே வெட்டாதே என்று இடது கையால் தடுத்தால் இடது கையில் காயம் ஏற்பட்டது. மீண்டும் என் தம்பியின் தலையின் மீது கத்தியால் 2 வெட்டு வெட்டினார்.

பிறகு சரவணன் என்பவர் எத்திராஜ் என்பவரின் கையில் இருந்த கத்தியை பிடிங்கி என் தம்பியின் தலையின் மீது 2 வெட்டு வெட்டினார். பிறகு இரத்த வெள்ளத்தில் மயங்கி கீழே விழுந்த என்

தம்பியை பார்த்து சுப்பிமணி என்பவர் நடிக்கிறியா என்று கூறி கல்லை எடுத்து தலையின் மீது போட்டார். கீதாவும், ஆகாஷ் என்பவரும் மீண்டும் அதே கல்லை எடுத்து என் தம்பியின் மீது போட்டார்கள். அதன் பிறகு ஆம்புலன்சிற்கு தகவல் கொடுத்து சிகிச்சைக்காக திருத்தணி அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். இது சம்பந்தமாக என் தம்பி மனைவி ஜோதி புகார் கொடுத்தார் அந்த புகாரின் பேரில் போலீசார் என்னை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**

எதிரிகள் தரப்பு மனுவின் பேரில் குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

Jayamangalam Sudhakaran

II Additional District Judge, Arakkonam
Digitally signed by Jayamangalam Sudhakaran
Date: 2025.10.17 18:13:56 +0530

II Additional District and Sessions Judge,
Arakkonam.